# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 1/2013** **நாள் : 08/01/2013**

*பெறுநர்*

***மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,***
***கிளைச் செயலாளர்கள் மற்றும்***
***மாநில செயற்குழு உறுப்பினர்கள்.***

**அனைவருக்கும்**
**இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல்**
**நல்வாழ்த்துக்கள்**

அன்பான தோழரே, வணக்கம்

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 5.1.2013 அன்று மத்திய அமைப்பின் மாநில தலைவர் தோழர் கே. விஜயன் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் 32 நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்ட மாநில சிஐடியு வின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் அவர்கள் தன்னுடைய உரையில் மாநில மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதோடு பெண்கள் மீது நடத்தப்படுகின்ற பாலியல் வன்கொடுமைக்கு எதிராக நடைபெறுகின்ற இயக்கங்களில் மின் வாரிய ஊழியர்கள் கலந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை விளக்கினார்.

மேலும் அண்மையில் நடைபெற உள்ள சி.ஐ.டி.யு. வின் மாநில, அகில இந்திய மாநாடுகள் நடைபெற உள்ளதையும், அதையொட்டி ஜனவரி 19 அன்று நடத்த வேண்டிய பிரச்சார இயக்கத்தைப் பற்றியும் விளக்கினார். மேலும் 18.11.2012 அன்று நடைபெற்ற மறியல், வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம், மருத்துவ பிரதிநிதிகள் வேலை நிறுத்தம் போன்றவற்றை விளக்கியதோடு மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு நவீன தாராளமயத்தை வலிமையாக நடைமுறைப்படுத்துவதற்கும் முயற்சிக்கின்றது. அதனுடைய சுமை, தாக்குதல் என்பது சாதாரண மக்களின் மீது விழுகின்ற நிலை ஏற்பட்டுள்ளதையும் விளக்கியதோடு பல ஆலைகளில் உற்பத்தி என்பது குறைக்கப்பட்டு லே ஆப் என்பது விடப்பட்டுள்ளது என்ற அபாயத்தையும் குறிப்பிட்டுப் பேசினார்.

அரசியல் கட்சிகள் பாராளுமன்ற தேர்தலை சந்திப்பதற்கு தங்களை தயார்படுத்திக் கொண்டுள்ளது என்பதையும் குறிப்பிட்டார். மேலும் தர்மபுரியில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது

தொடுக்கப்பட்ட தாக்குதலால் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு மின் ஊழியர் மத்திய அமைப்பு உதவிக்கரம் நீட்டியதற்கு நன்றி தெரிவித்ததோடு, பாலியல் கொடுமைக்கு எதிராக, அந்நிய மூலதனத்திற்கு எதிராக மின் ஊழியர் மத்திய அமைப்பு தொடர்ந்து இயக்கம் நடத்திட வேண்டும் என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநிலத் தலைவர் தோழர் கே. விஜயன் பேசுகின்ற போது இக்கால கட்டத்தில் ஏற்பட்டுள்ள கலாச்சார மாற்றங்கள், பெண்கள் வெளியில் சென்று பணி செய்ய வேண்டிய நிலைமை இதையொட்டி பெண்கள் மீதான பாலியல் கொடுமை நடைபெறுவது சம்மந்தமாகவும், டெல்லியில் நடைபெற்ற பாலியல் கொடுமைக்கு எதிராக மக்கள் எழுச்சியோடு போராடியதையும் குறிப்பிட்டார்.

நிலக்கரி பற்றாக்குறை, மின்சார தயாரிப்பில் மந்த நிலை, சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்வது, மின்சாரத்துறை மேலும் தனியாரிடம் செல்லும் அபாய நிலையை விளக்கியதோடு, சமீபத்தில் டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்குழு கூட்டம் அதில் தமிழக முதல்வரின் நடவடிக்கையை விளக்கினார். தமிழக அரசு என்பது மக்கள் மீதும் தொழிலாளர் மீதும் தாக்குதல் தொடுக்கும் நிலையை எடுத்துள்ளது. அதை எதிர்த்து தொழிலாளர்கள் ஒன்று திரள வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் தோழர் எஸ். எஸ். சுப்ரமணியன் மாநாட்டிற்கு பின்னர் நடைபெற்ற நிகழ்ச்சிகளை குறிப்பிட்டு கூறியதில் வாரியத் தலைவரை சந்தித்த போது கணக்கீட்டுப் பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகளை 1 1/2 ஆண்டு கால பணிக்காலத்தை ஓய்வூதியத்திற்கு சேர்ப்பது, 4000 அசசர் இரண்டாம் நிலை ஊழியர்களை அசசர்களாக மாற்றுவது. 4000 ஐடிஐ படித்தவர்களை வேலைக்கு எடுப்பது, பகுதி நேர ஊழியர்களுக்கு போனஸ் வழங்குவது, நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் 2002 ஆம் ஆண்டுக்குரிய பஞ்சப்படியையும் நிலுவைத் தொகையை உடனடியாக வழங்குவது, திறந்த வெளி பல்கலைக்கழகம் சம்மந்தமான சாதகமான முடிவினை எடுப்பது போன்றவைகளை வலியுறுத்தி சில வாக்குறுதிகள் பெற்று அதில் சில கோரிக்கைகளின் மீது வாரியம் உத்தரவிட்டுள்ளதையும் விளக்கினார்.

மேலும் கோவையில் டிசம்பர் 15, 16, 17 தேதிகளில் நடைபெற்ற மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில மாநாடு அதையொட்டி நவம்பர் 20 இல் நடத்திய பிரச்சாரப்பயணம் மாநாட்டையொட்டி தமிழகத்தின் 6 முனைகளில் இருந்து வந்த செங்கொடி, ஜோதி பிரச்சாரப் பயணக்குழுக்களுடன் 3 நாட்கள் மாநாடு நடைபெற்றது. அதையொட்டி நடந்த திறந்த வெளிக்கருத்தரங்கம், நிறைவு நிகழ்ச்சியாக நடைபெற்ற பேரணி பொதுக்கூட்டம் ஆகியவைகள் சம்மந்தமாக ஒரு எழுத்து பூர்வமான பரிசீலனையை முன் மொழிந்து பேசினார்.

அதன் பின்னர் கோவை மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில நிர்வாகிகளின் பணிப் பங்கீடு பிப்ரவரி 1 முதல் 4 வரை நடைபெற உள்ள சிஐடியு- வின் தமிழ்மாநில மாநாட்டை யொட்டி நாம் செய்ய வேண்டிய பணிகள், மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டிய பிரதிநிதிகளுக்கான ஓர் ஆலோசனையையும் முன் வைத்தார்.

மேலும் 10 அம்ச கோரிக்கைகளை வைத்து 2013 பிப்ரவரி 20 - 21 இல் அகில இந்திய அளவில் நடைபெற உள்ள 48 மணி நேர வேலை நிறுத்தம் அதில் மின் வாரிய ஊழியர்கள் திரளாக கலந்து கொள்வதற்கு சுயேட்சையாகவும் கூட்டாகவும் நடத்தவுள்ள இயக்கத்தையும் முன் மொழிந்ததோடு

மின் வாரிய ஊழியர்களின் தேங்கியுள்ள பிரச்சனைகளின் மீது வாரியத்தின் அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையில் 5.3.2012 அன்று நாமும், பொறியாளர் அமைப்பும், ஓய்வு பெற்றோர் நல அமைப்பும் இணைந்து நடத்த உள்ள 24 மணி நேர பெருந்திரள் கூட்டு முறையீடு அதற்கான திட்டமிடல் போன்றவைகளை விளக்கினார்.

2012 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை இறுதிப்படுத்துகின்ற வகையில் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் 2011 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை அடையவே ஒரு பெரும் இடைவெளி உள்ளதைச் சுட்டிக்காட்டி அந்த இடைவெளியை முற்றிலுமாக நீக்குவதற்குண்டான நடவடிக்கையை உடன் எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் விளக்கினார்.

## அறிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பின்னர் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

(1) உறுப்பினர் சேர்ப்பை இறுதிப்படுத்தும் வகையில் 2012 ஆம் ஆண்டிற்குண்டான உறுப்பினர் சேர்த்தலை 2013 ஆம் ஆண்டு பிப்ரவரி 5க்குள் முடிக்க வேண்டும்.

2013 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பை இந்த ஆண்டு முழுவதும் நீட்டிக்கின்ற வகையில் அமையாமல் 2013 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை, 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முடித்திடுவது.

(2) மின் ஊழியர் மத்திய அமைப்பின் 14 வது மாநில மாநாட்டை அனைத்து வகையிலும் சிறப்பாக நடத்திய மின் ஊழியர் மத்திய அமைப்பின் கோவை மண்டலத்திற்கு மனமார்ந்த நன்றியை தெரிவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும் மாநாட்டின் பணிகளில் ஈடுப்பட்ட ஊழியர்களை பாராட்டி வரவேற்புக்குழுவை நிறைவுக்கு கொண்டுவரும் நிகழ்ச்சியை 20.1.2013 அன்று நடத்தி முடிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

(3) பிப்ரவரி 1 முதல் 4 வரை நடைபெற உள்ள சிஐடியு - வின் மாநில மாநாட்டின் நோக்கங்களை மின் வாரிய ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லும் வகையில் அனைத்து கோட்ட அலுவலகங்களுக்கு முன்னால் டிஜிட்டல் பேனர்களை ஜனவரி 19 ம் நாள் தியாகிகள் தினத்தன்று வைத்து மாநாட்டு பிரச்சாரத்தை துவங்குவது. மேலும் பிரிவு வாரியாக நுழைவாயிற்கூட்டங்களை நடத்தி பிரச்சாரங்களை கொண்டு செல்வது.

(4) பிப்ரவரி 20, 21 தேதிகளில் 48 மணி நேர வேலை நிறுத்தத்தின் கோரிக்கைகளையும், மின் வாரிய ஊழியர்களின் பிரச்சனைகள் மீது அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் 5.3.2013 அன்று நடைபெற உள்ள 24 மணி நேர பெருந்திரள் கூட்டு முறையீட்டின் நோக்கங்கள், அதற்கான தயாரிப்பாக பிப்ரவரி 16, 17 தேதிகளில் திட்ட வாரியான பேரவைகளை நடத்துவது அந்த பேரவைகளில் மாநில நிர்வாகிகள் கலந்து கொள்ளச் செய்வது என்று முடிவு செய்யப்பட்டது.

(5) கூட்டுறவு நாணய சங்க தேர்தலுக்கு முழு தயாரிப்பு செய்து கூட்டுறவு நாணய சங்க தேர்தலை வெற்றிகரமாக சந்திப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

## திருச்சியில் நடைபெற உள்ள சிஐடியு-வின் மாநில மாநாட்டு பிரதிநிதிகள்

1. தோழர் து. கோவிந்தராஜு
2. தோழர் எஸ். இராஜேந்திரன்
3. தோழர் கே. ரவிச்சந்திரன்
4. தோழர் எம். தனலட்சுமி
5. தோழர் ஈ. அந்தோணி
6. தோழர் எம். வெங்கடேசன்
7. தோழர் வி. இளங்கோ
8. தோழர் தி. ஜெயசங்கர்
9. தோழர் ஆர். சிவராஜ்
10. தோழர் சி. ஜோதிமணி
11. தோழர் வி. மதுசூதனன்
12. தோழர் எஸ். வண்ணமுத்து
13. தோழர் எஸ். பன்னீர் செல்வம்
14. தோழர் ஏ. பழனி
15. தோழர் கே. அம்பிகாபதி
16. தோழர் ஏ. வீரணன்
17. தோழர் டி. கே. சம்பத்ராவ்
18. தோழர் வ. சீனிவாசன்
19. தோழர் அன்பழகன்
20. தோழர் கே. காங்கேயன்
21. தோழர் ஏ. ரவிதாகூர்
22. தோழர் ஐ.எம்.ஆர். கணேசன்
23. தோழர் டி. அறிவழகன்
24. தோழர் ஜீ. மதனகோபால்
25. தோழர் எஸ். ராமச்சந்திரன் (தேனி)
26. தோழர் கே. அருள்செல்வன்
27. தோழர் பி.கே. சிவக்குமார்
28. தோழர் எஸ். ரவிச்சந்திரன் (மேட்டூர்)
29. தோழர் எம். வசுமதி
30. தோழர் எம். சாலட்
31. தோழர் எம். அங்கற்கண்ணி
32. தோழர் எம். மாலா

### மாற்று பிரதிநிதிகள்

1. தோழர் எஸ். ஆனந்தன் (திருவண்ணாமலை)
2. தோழர் எஸ். ஜெயசீலன்
3. தோழர் எஸ். உமாநாத் (சிவகங்கை)
4. தோழர் டி. ஸ்ரீதர் (காஞ்சிபுரம்)
5. தோழர் கோமளாதேவி
6. தோழர் டி. வனஜா (கன்னியாகுமரி)

மாநில மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளில் மாநில மையம், மண்டலச் செயலாளர்கள், நிதிக்குழு நீதிமன்ற வழக்குகள் குழு, நிர்வாகத்தோடு பேச்சு வார்த்தை, மின் கதிர் ஆசிரியர்குழு, குடும்ப நல பாதுகாப்பு திட்டக்குழு, அனல், புனல், உழைக்கும் பெண்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கள் தனியார் மின் உற்பத்தி நிலையங்களின் ஊழியர் ஒருங்கிணைப்புக் குழு, கலைக்குழு போன்றவைகளுக்கு கீழ்க்கண்டவாறு பணி ஒதுக்கீடு என்பது செய்யப்பட்டுள்ளது.

புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளின் கிளை பொறுப்பு, கேட்டகிரி வாரியான குழுக்கள் அமைத்தல் போன்றவைகள் மாநில செயற்குழுவில் வைத்து முழுமைப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அவைகளின் அடிப்படையில்......

## மாநில மையம்

தோழர் கே. விஜயன்

தோழர் எஸ். எஸ். சுப்பிரமணியன் (கன்வீனர்)

தோழர் ஈ. அந்தோணி

தோழர் எம். வெங்கடேசன்

தோழர் எஸ். இராஜேந்திரன்

தோழர் வீ. இளங்கோ

தோழர் கே. ரவிச்சந்திரன்

தோழர் டி. ஜெய்சங்கர்

தோழர் ஏ. பழனி

தோழர் தி. அறிவழகன்

தோழர் எம். தனலட்சுமி

## மண்டலச் செயலாளர்கள்

**சென்னை வடக்கு மண்டலம்**

தோழர் டி. ஜெய்சங்கர்

**சென்னை தெற்கு மண்டலம்**

தோழர் ஏ. பழனி

**விழுப்புரம் மண்டலம்**

தோழர் கே. அம்பிகாபதி

**வேலூர் மண்டலம்**

தோழர் ஆர். சிவராஜ்

**ஈரோடு மண்டலம்**

தோழர் சி. ஜோதிமணி

**கோவை மண்டலம்**

தோழர் வி. மதுசூதனன்

**திருச்சிமண்டலம்**

தோழர் எம். பன்னீர்செல்வம்

**மதுரை மண்டலம்**

தோழர் ஏ. வீரணன்

**நெல்லை மண்டலம்**

தோழர் எஸ். வண்ணமுத்து

## நிதிக்குழு

தோழர் ஈ. அந்தோணி (கன்வீனர்)

தோழர் எஸ். எஸ். சுப்பிரமணியன்

தோழர் கே. விஜயன்

தோழர் எம். வெங்கடேசன்

தோழர் து. கோவிந்தராஜு

## நீதிமன்ற வழக்குகள்

தோழர் கே. விஜயன் (கன்வீனர்)

தோழர் எஸ்.எஸ். சுப்பிரமணியன்

தோழர் ஈ. அந்தோணி

தோழர் து. கோவிந்தராஜு

தோழர் கே. ரவிச்சந்திரன்

தோழர் கே. அருள்செல்வன்

தோழர் ஏ. பழனி

தோழர் தி. ஜெய்சங்கர்

## நிர்வாகத்தோடு பேச்சு வார்த்தை

தோழர் எஸ்.எஸ். சுப்பிரமணியன் (கன்வீனர்)

தோழர் கே. விஜயன்

தோழர் ஈ. அந்தோணி

தோழர் எஸ். ராஜேந்திரன்

தோழர் வீ. இளங்கோ

தோழர் எம். வெங்கடேசன்

தோழர் கே. ரவிச்சந்திரன்

தோழர் தி. ஜெய்சங்கர்

தோழர் ஏ. பழனி

தோழர் து. கோவிந்தராஜு

## மின்கதிர் ஆசிரியர் குழு

தோழர் எஸ். எஸ். சுப்பிரமணியன்

(ஆசிரியர்)

தோழர் கே.விஜயன்

தோழர் எம். வெங்கடேசன்

தோழர் ஈ. அந்தோணி

தோழர் எஸ். ராஜேந்திரன்

தோழர் து. கோவிந்தராஜு

தோழர் கோ. மோகன்ராஜ்

தோழர் எம். தனலட்சுமி

## குடும்பநலபாதுகாப்பு திட்டக்குழு

**தலைவர்**
தோழர் எஸ். எஸ். சுப்பிரமணியன்

**செயலாளர்**
தோழர் கே. ரவிச்சந்திரன்

**பொருளாளர்**
தோழர் டி.சி. கமலக்கண்ணன்

**துணைத் தலைவர்**
தோழர் எம். தயாளன்

**இணைச்செயலாளர்**
தோழர் எஸ். இராஜாராமன்

**குழு உறுப்பினர்கள்**

தோழர் டி. பழனிவேலு

தோழர் எஸ். உமாநாத்

தோழர் என். பால்ராஜ்

## அனல் மின்நிலையங்களுக்கான ஆலோசனைக்குழு

தோழர் வீ. இளங்கோ (கன்வீனர்)

தோழர் ஈ. ஜெயவேலு

தோழர் கே. வெங்கட்டய்யா

தோழர் எஸ். செந்தில் வேலன்

தோழர் எஸ். கணபதிசுரேஷ்

## புனல் மின் நிலையங்களுக்கான ஆலோசனைக்குழு

தோழர் பி.கே. சிவக்குமார் (கன்வீனர்)

தோழர் ஜி. சுகுமாறன்/காடம்பறை

தோழர் எம். முரளிதரன் / குந்தா

தோழர் எம். கோபாலகிருஷ்ணன்/நெல்லை உற்பத்தி

தோழர் எல். செல்வநாதன் ஈரோடு/உற்பத்தி

## உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழு

தோழர் எம். தனலட்சுமி (கன்வீனர்)

தோழர் எம். வசுமதி/தலைமையம்

தோழர் எம். சாலட்/சென்னை வடக்கு

தோழர் எம். மாலா/இராமநாமபுரம்

தோழர் எம். அங்கயற்கண்ணி (கோவை)

தோழர் டி. வனஜா (கன்னியாகுமரி)

தோழர் கோமளாதேவி (சென்னை தெற்கு)

## தனியார் மின்உற்பத்தி நிலையங்களின் ஒருங்கிணைப்புக்குழு

தோழர் கே. விஜயன் (கன்வீனர்)

தோழர் வை. பாலசுப்பிரமணியன்

தோழர் ஆர். குருவேல்

தோழர் எஸ். அப்பாதுரை

தோழர் ஜி. ராமகிருஷ்ணன்

## கலைக்குழு

தோழர் து. கோவிந்தராஜு (அமைப்பாளர்)

தோழர் எம்.தனலட்சுமி

தோழர் கோ. மோகன்ராஜ்

தோழர் எஸ். உமாநந்தன்

தோழர் கே. வெங்கடேசன்

***கிளைச் செயலாளர்கள் கவனத்திற்கு***

***மத்திய அமைப்பின் ஒரு சில சுற்றறிக்கையை மாநிலப் பொதுக்குழு உறுப்பினர்களுக்கும் அனுப்ப உள்ளதால் கிளைச் செயலாளர்கள் இதில் கவனம் செலுத்தி தங்கள் கிளையின் தலைவர், பொருளாளர், கோட்டச் செயலாளர் (கோட்டத்தின் பெயர் குறிப்பிட்டு) ஆகியோர் விலாசத்தை ஒரு சில தினங்களுக்குள் அனுப்ப வேண்டுகிறோம். (செல் பேசி எண் உட்பட)***

**குறிப்பு:**

1) கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகளை தீர்த்து வைப்பது சம்மந்தமாக நாம் தொடர்ச்சியாக எடுத்த முயற்சியின் விளைவாக 1982 ஆம் ஆண்டு கணக்கீட்டாளராக பணியில் சேர்ந்த ஊழியர்களுக்கு முதல் 1 1/2 ஆண்டு காலத்தை ஒய்வூதியம் கணக்கிட வாரிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 5.3.2013 இயக்கத்திற்கு முன் வைக்கப்பட்ட கோரிக்கையில் ஒரு கோரிக்கையில் வெற்றி காணப்பட்டுள்ளது.

2) காலி பணி இடங்களை நிரப்பிட வேண்டும் என்று நாம் எடுத்த தொடர்ச்சியான முயற்சியின் விளைவாக கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையாக பணியாற்றும் சுமார் 4000 ஊழியர்களுக்கு கணக்கீட்டாளராக பதவி உயர்வு அளிக்க தகுதிகான் அறிக்கை கேட்கப்பட உள்ளது. இதுவும் 5.3.2013 போராட்டத்தின் ஒரு கோரிக்கையாகும்.

இது தவிர 1500 கணக்கீட்டாளர் பதவிகளை வேலை தேடி தரும் அலுவலகம் மூலமாக நியமனம் செய்திட ஆரம்ப கட்ட பணிகள் துவங்கி உள்ளது.

3) அனல் மின் நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்களின் பதவி உயர்வு சம்மந்தமாக ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தையொட்டி தொழில் நுட்ப உதவியாளர் டெஸ்டர் கெமிக்ல், ஓட்டுநர் ஆகிய மாநிலம் தழுவிய முதன்மை பட்டியலில் உள்ளவர்களுக்கு புதிய பதவிகளை அனுமதிப்பதின் மூலமாக 417 களப்பிரிவு ஊழியர்களுக்கு முகவர் இரண்டாம் நிலையாக பதவி உயர்வு கிடைக்கும் வாய்பினை உருவாக்கும் வாரிய உத்தரவு 7.1.2013 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தோழமையுள்ள

[signature]

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

## கோவை மாநாடு முடிவுகள், 2013 மார்ச் 5ம் தேதி பெருந்திரள் முறையீடு 2013 பிப்ரவரி 20, 21 வேலை நிறுத்த ஆயத்த கூட்டம் ஆகியவைகளை விளக்கும் பேரவைக் கூட்டங்கள்

| | **கிளையின் பெயர்** | |
|---|---|---|
| **சென்ன வடக்கு மண்டலம்** | | |
| 1. | வடசென்னை | தோழர் **ஆர். கருமலையான்** & தோழர் **ஆர். ஸ்ரீதர்** |
| 2. | மத்திய சென்னை | தோழர் **எஸ். இராஜேந்திரன்** |
| **சென்ன தெற்கு மண்டலம்** | | |
| 3. | மேற்கு சென்னை | தோழர் **வி. இளங்கோ** |
| 4. | தென்சென்னை | தோழர் **ஆர். குருவேல்** |
| 5. | செங்கல்பட்டு | தோழர் **வி. பாலசுப்பிரமணியம்** |
| **வேலூர் மண்டலம்** | | |
| 6. | காஞ்சிபுரம் | தோழர் **டி. அறிவழகன்** |
| 7. | வேலூர் | தோழர் **எம். தனலெட்சுமி** |
| 8. | திருப்பத்தூர் | தோழர் **எஸ். ஆனந்தன்** |
| 9. | தர்மபுரி | தோழர் **பி.கே. சிவக்குமார்** |

| | | |
|---|---|---|
| **விழுப்புரம் மண்டலம்** | | |
| 10. | விழுப்புரம் | தோழர் **கே. ரவிச்சந்திரன்** |
| 11. | கடலூர் | தோழர் **ஈ. அந்தோணி** |
| 12. | திருவண்ணாமலை | தோழர் **எம். வெங்கடேசன்** |
| **திருச்சி மண்டலம்** | | |
| 13. | பெரம்பலூர் | தோழர் **ஜி. ராமகிருஷ்ணன்** |
| 14. | திருச்சி/மாநகர் | தோழர் **சி. ஜோதிமணி** |
| 15. | கரூர் | தோழர் **ஆர். ரவிக்குமார்** |
| 16. | புதுக்கோட்டை | தோழர் **டி. பழனிவேல்** |
| 17. | தஞ்சாவூர் | தோழர் **டி. ஸ்ரீதர்** |
| 18. | நாகப்பட்டிணம் | தோழர் **வி. மதுசுதனன்** |
| **மதுரை மண்டலம்** | | |
| 19. | மதுரை | தோழர் **டி. கோவிந்தராஜு** |
| 20. | மதுரை மாநகர் | தோழர் **கே. அம்பிகாபதி** |
| 21. | தேனி | தோழர் **எஸ். வண்ணமுத்து** |
| 22. | ராமநாதபுரம் | தோழர் **டி. வீரணன்** |
| 23. | சிவகங்கை | தோழர் **ஆர். சிவராஜ்** |
| 24. | திண்டுக்கல் | தோழர் **தி. ஜெயசங்கர்** |
| **திருநெல்வேலி மண்டலம்** | | |
| 25. | விருதுநகர் | தோழர் **ஐ.எம்.ஆர். கணேசன்** |
| 26. | திருநெல்வேலி | தோழர் **எஸ்.எஸ். சுப்ரமணியன்** |
| 27. | தூத்துக்குடி | தோழர் **கே. அருள்செல்வன்** |
| 28. | கன்னியாகுமரி | தோழர் **எஸ்.எஸ். சுப்ரமணியன்** |
| **கோவை மண்டலம்** | | |
| 29. | நீலகிரி | தோழர் **டி. கோபாலகிருஷ்ணன்** |
| 30. | கோவைதெற்கு | தோழர் **சி. ஜோதிமணி** |
| 31. | கோவைவடக்கு | தோழர் **கே. விஜயன்** |
| 32. | கோவை மாநகர் | தோழர் **எம். பன்னீர்செல்வம்** |
| 33. | திருப்பூர் | தோழர் **ஏ. பழனி** |
| 34. | உடுமலைபேட்டை | |
| **ஈரோடு மண்டலம்** | | |
| 35. | சேலம் | தோழர் **ஜி. மோகன்ராஜ்** |
| 36. | மேட்டூர் | தோழர் **எஸ். ராஜேந்திரன்** |
| 37. | ஈரோடு | தோழர் **கே. ரவிச்சந்திரன்** |
| 38. | கோபி | தோழர் **டி. கோவிந்தராஜு** |
| 39. | நாமக்கல் | தோழர் **கே. விஜயன்** |
| **அனல் மின்நிலையங்கள்** | | |
| 40. | வடசென்னை அனல் | தோழர் **வி. இளங்கோ** |
| 41. | எண்ணூர் | தோழர் **எஸ். ஆனந்தன்** |
| 42. | மேட்டூர் அனல் | தோழர் **எஸ். வண்ணமுத்து** |
| 43. | தூத்துக்குடி அனல் | தோழர் **அருள்செல்வம்** |
| **புனல் மின்நிலையங்கள்** | | |
| 44. | ஈரோடுஉற்பத்தி | தோழர் **எம். பன்னீர்செல்வம்** |
| 45. | காடம்பாறை | தோழர் **வி. மதுசூதனன்** |
| 46. | குந்தா உற்பத்தி | தோழர் **பி.கே. சிவக்குமார்** |
| 47. | நெல்லைஉற்பத்தி | தோழர் **ஐ.எம்.ஆர். கணேசன்** |
| 48. | காற்றாலைபண்ணை | தோழர் **எஸ். வண்ணமுத்து** |
| 49. | பொதுகட்டுமான ம் | தோழர் **தி. ஜெய்சங்கர்** |